பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5 00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 11 திங்கட்கிழமை (27 09 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 303

# பெரும் மக்கள் எழுச்சியுடன் நேற்று திலீபன் நினைவு தினம் அனுஷ்டிப்பு

## கோட்ட மட்ட நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கானோர்

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 27

தமிழீழ விடுதலைப் போரில், உண்ணா நோன்பிருந்து தன்னை ஆகுதியாக்கிய தியாகி திலீபன் வீரசொர்க்கம் அடைந்த ஆறாவது நினைவு தினம் நேற்று மக்களால் எழுச்சியுடனும், உணர்வுபூர்வமாகவும் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த பதினொரு நாட்களாக நடைபெற்ற நினைவு நிகழ்வுகளுக்குச் சிகரம் வைத்தாற்போல நேற்றைய நிகழ்ச்சிகள் அமைந்தன.

யாழ். மாவட்டம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் நடைபெற்ற அஞ்சலி மற்றும் நினைவு நிகழ்ச்சிகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

தமிழீழப் பிரதேசப் பகுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் தடைகளைத் துணிந்து மீறி மக்கள் புரட்சி வெடித்துள்ளது; முழுமை பெற்றால் சுதந்திரம்

### திலீபன் நினைவுக் கூட்டத்தில் இளம்பரிதி

யாழ்ப்பாணம், செப். 27

மக்களை அறியாமலே அவர்களது புரட்சி வெடிக்கத் தொடங்கி உள்ளது. எனினும் தமிழர்கள் முழுமையான புரட்சியில் இறங்கவேண்டும். அப்போதுதான் சுதந்திரத்தைப்பெற முடியும். திலீபனின் எண்ணம் நிறைவேறும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திரு. ப. இளம்பரிதி.

நல்லூரில் நேற்று மாலை நடைபெற்ற தியாகி திலீபன் நினைவுக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நினைவுக் கூட்டம் நல்லூர் வட்டப் பொறுப்பாளர் திரு. எழிலன் தலைமையில் நடைபெற்றது.

திரு இளம்பரிதி தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தியாகி திலீபனின் தியாக மரணம் தமிழர் போராட்டத்தின் புதிய உத்வேகம். போராட்டத்தின் புதிய வடிவமாகவும் அமைந்தது. சுதந்திரம் என்ற இலக்கை அடைவதற்கு மக்கள் புரட்சி வெடிக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மொறவெவ விமான தளத்தில் புலிகள் அதிரடித் தாக்குதல்

### இரு படையினர் பலி; நால்வர் படுகாயம்

கொழும்பு, செப். 27

திருகோணமலை மாவட்டம் முதலிக்குளத்தில் (மொறவெவவில்) உள்ள விமானப் படையின் விமான தளத்தில் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த விமானப்படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று திடீர்த் தாக்குதல் நடத்தினார்கள்.

அதில் இரண்டு விமானப் படையினர் கொல்லப்பட்டனர். 4 படையினர் படுகாயமடைந்தனர் என்று கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

(உ-எ-த-162)

## விமானப் படையையும் விரைவில் அமைப்போம்!

### கடற்புலி பிரமுகர் சூளுரை

யாழ்ப்பாணம், செப். 27

"எமது இறைமையை நிலைநிறுத்த தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றில் நாம் நிறைவு காண வேண்டும். இன்று நாம் தரைப்படையும், கடற்படையும் அமைத்து வெற்றி கண்டுவிட்டோம். விரைவில் விமானப் படையை அமைத்து அதிலும் நிறைவு காண்போம்."

—இப்படிக் கூறினார் கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ஆதவன்.

நல்லூரில் நேற்று மாலை நடந்த தியாகி திலீபன் நினைவுக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இருசிங்கள ஊர்காவலர் முல்லையில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 27

முல்லை மாவட்டம் சாமன்குளம் பகுதியில் நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் ஊர்காவற் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் சிங்கள ஊர்காவற் படையினர் இருவர் கொல்லப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து 303 ரகத் துப்பாக்கிகள்-2, அவற்றுக்குரிய ரவைக்கூடுகள்-2, ரவைகள் - 17 மற்றும் 3 கத்திகள் ஆகியவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

(ஒ)

## தாண்டிக்குளம் படையினர் 10லொறிகளைத் தடுத்தனர்?

கொழும்பு, செப். 27

தடைசெய்யப்பட்ட பொருள்களை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பத்து லொறிகள் வவுனியாவுக்கு இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தாண்டிக்குளம் சோதனை முகாமில் வைத்து இராணுவத்தினரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டன என்று இலங்கை வானொலி அறிவித்தது.

தடைசெய்யப்பட்ட பொருள்கள் வீதி மார்க்கமாக கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து கிளாலி வழியாக யாழ்ப்பாணத்துக்கு கடத்தப்படுவதாகவும் இலங்கை வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

உ-எ)

## பழனி இடைத்தேர்தலிலும் வெற்றி அ.தி.மு.கவுக்கே!

சென்னை, செப். 27

தமிழ்நாடு பழனி நாடாளுமன்றத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலிலும் அ.தி.மு.க. வெற்றியீட்டியது.

அ.தி.மு.க. வேட்பாளர் கே. குமாரசாமி தமக்கு அடுத்ததாக வந்த தி.மு.க. வேட்பாளர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசனை விட 44 ஆயிரத்து 396 வாக்குகள் அதிகம் பெற்றார்.

வாக்குகள் விவரம் வருமாறு:-

★ கே. குமாரசாமி (அ.தி.மு.க.) — இலட்சத்து 72 ஆயிரத்து 934 வாக்குகள்,

★ சுப்புலட்சுமி ஜெகதீசன் (தி.மு.க) — 2 லட்சத்து 28 ஆயிரத்து 538 வாக்குகள்.

★ எஸ். வேணுகோபால் (இந்திரா காங்கிரஸ்) லட்சத்து 28 ஆயிரத்து 510 வாக்குகள்.

மற்றும் 44 சுயேச்சை வேட்பாளர்களும் இத்தேர்தலில் போட்டியிட்டனர்.

ராணிப்பேட்டை சட்டசபைத் தொகுதிக்கான இடைத்தேர்தலிலும் அ.தி.மு.கவே வெற்றியீட்டியது என்று தெரிந்தது.

(உ-எ 8)

## யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்புப் பிரதேசம் மீது நேற்றிரவு ஷெல் தாக்குதல்

### வீட்டில் இருந்த இருவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்புப் பிரதேசத்தில் — எல்லையைக் குறிக்கும் பகுதியில் — கஸ்தூரியார் வீதி அருகில் — செம்மா தெருப் பக்கமாக நேற்றிரவு 7 மணியளவில் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது.

வளவில் விழுந்து வெடித்த ஷெல்லினால் அருகில் வீட்டினுள் இருந்த இருவர் காயமடைந்தனர். வீடும் இறு சேதத்திற்கு உள்ளானது.

பாதுகாப்பு பிரதேசத்தைக் குறிக்கும் ஒளி அடையாளமான மின் விளக்குகள் (ரியூப் லைட்டுகள்) சேதமடைந்தன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் நாளையும் படகுச் சேவை

யாழ்ப்பாணம், செப். 27

கிளாலி-பூநகரிப் படகுச் சேவை இன்றும், நாளையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

## சித்தமருத்துவ மாணவர் விரிவுரைக்குச் செல்வர்

கடந்த மாதம் 5 ஆம் திகதி முதல் வகுப்புகளைப் பகிஷ்கரித்துவந்த யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை மாணவர்கள் இன்று முதல் விரிவுரைகளுக்குச் செல்லத் தீர்மானித்திருப்பதாக சித்த மருத்துவ மாணவர் மன்றத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் கீழ் இயங்கிவந்த சித்த மருத்துவத்துறையை தனிப் பீடமாக மாற்றக்கோரி, சித்த மருத்துவ மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்து, சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தி வந்தது தெரிந்ததே.

பின்னர் கொழும்பில் நடந்த பேச்சுக்களை அடுத்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரின் கீழ் சித்தமருத்துவத் துறையை தனிப் பிரிவாக இயங்கச் செய்ய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இணக்கம் தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து மாணவர்கள் தமது சத்தியாக்கிரகப் போராட்டத்தைக் கைவிட்டனர்.

சித்தமருத்துவத் துறையை தனிப்பிரிவாக இயங்கச் செய்யும் முடிவை எதிர்வரும் முதலாம் திகதி முதல் அமுல் செய்வது என யாழ். பல்கலைக்கழகம் தற்போது முடிவு செய்ததை அடுத்து மாணவர்கள் தமது பகிஷ்கரிப்புப் போராட்டத்தையும் கைவிட முடிவு செய்துள்ளனர்.

சித்தமருத்துவத் துறைக்கு 1992 1993 ஆம் கல்வி ஆண்டுக்கு புதிய மாணவர்களை, புதிய நிர்வாகம் விரைவில் தெரிவுசெய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ-5)

### படையினரின் நிபந்தனையுடன்

## "றுகுணு" கப்பல் நேற்று பருத்தித்துறைக்கு வந்தது

யாழ்ப்பாணம், செப். 27

கடற்படையினரால் திருகோணமலைத் துறைமுகத்தில் கடந்த ஒரு வாரகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த "றுகுணு" கப்பல் நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட இக்கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறையை வந்தடைந்தது.

கொழும்பிலிருந்து இக்கப்பல் புறப்பட்ட போது யாழ்ப்பாணம் வருவதற்காக அதில் ஏறிய இரு அரச அதிகாரிகளும் கப்பல் திருமலையில் தடுத்து வைக்கப்பட்ட போது கப்பலில் இருந்து இறங்க அனுமதிக்கப்படவில்லை.

திருமலை துறைமுகத்தில் வாரிய கடற்படைக் கப்பல் ஒன்று இந்தக் கப்பலுக்கு பாதுகாப்பாக அருகில் நிறுத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கப்பல் சிப்பந்திகளும் துருவித்துருவி விசாரிக்கப்பட்டனர்.

கப்பலின் மேல் தளத்தில் உள்ள பொருள்களை மட்டும் பருத்தித்துறையில் இறக்க வேண்டும் என்றும் —

எஞ்சிய பொருள்களை காங்கேசன்துறையில் வைத்து சோதித்து அது குறித்து முடிவு செய்யும் வரை அவற்றை இறக்கக் கூடாது என்றும் நிபந்தனை விதித்த பின்னரே கப்பலை திருமலையிலிருந்து புறப்பட்டுச் செல்ல படையினர் அனுமதித்தனர் என்றும் தெரியவந்தது.

நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த இக்கப்பலில் இருந்து மேல் தளத்தில் உள்ள பொருள்களில் ஒரு பகுதி இறக்கப்பட்டதை யடுத்து கப்பல் காங்கேசன் துறைக்குச் சென்றது (உ-3-5-109-178)

### அம்பாறையில் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 27

அம்பாறை சஞ்சிகுடிச்சாறு காட்டுப்பகுதியில் கடந்த 10 ஆம் திகதி முதல் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு விட்டு பின்வாங்கிக் கொண்டிருந்த வேளை விடுதலைப்புலிகள் கிளைமோர் தாக்குதல் ஒன்றை இராணுவத்தினர் மீது நடத்தினர்.

கடந்த 15ஆம் திகதி விடுதலைப்புலிகளால் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலினால் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதம் குறித்து தெரியவரவில்லை. (ஒ-3)

### மீண்டும் 6ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். அடைக்கலநாயகி ஆலய இளைஞர் மன்றத்தினர் நடத்தி வந்த ஜி. சி. ஈ. சாதாரணதர வினா-விடை வகுப்புகள் மீண்டும் எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டது. (ஒ)

### நிவாரணம் நிறுத்தப்படும்

திருநெல்வேலி, செப். 27

இடம்பெயர்ந்தவர்கள் திருமணம் செய்யும் போது, இடம் பெயராத பகுதியைச் சேர்ந்த ஒருவரை மணம் செய்தால் அவர்களுக்கான நிவாரணத்தை நிறுத்தும் படி அறிவுறுத்தும் சுற்று நிருபம் ஒன்று பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்தவர்கள் மத்தியில் திருமணம் செய்தால் மட்டுமே அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும். (த-143)

## எம்மை இனி எந்த நாடும் ஏமாற்றிவிட முடியாது!

### நல்லூர் உண்ணாவிரதத்தில் உரை

எமது அழிவுகள் குறைய வேண்டுமானால் போராட்டம் விரைவுபடுத்தப்பட வேண்டும். இந்தியா எம்மை ஏமாற்றியதுபோல் இனி எந்த ஒரு நாடும் எம்மை ஏமாற்ற முடியாது.

இவ்வாறு கூறினார் திரு. அருண் மாஸ்டர்.

தியாகி திலீபனின் ஆறாவது நினைவு தினத்தில் மதிஷோரம் நாள் அடையாள உண்ணாவிரதத்தை நல்லூரில் நிறைவுசெய்து பேசும் போதே தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு. அருண் மாஸ்டர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசும்போது கூறியதாவது;

எமது கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்காத இந்தியா எமது போராட்டத்தின் காரணமாக இந்த மண்ணில் இருந்து வெளியேறியது அவர்கள் இந்தச் சந்ததியுடன் முடியவேண்டும் என்ற எமது தேசியத் தலைவரின் குறிக்கோளும் அதற்காக தன்னை அர்ப்பணித்த திலீபனின் கனவும் நிறைவேறவேண்டும் என்றார்.

நல்லூர் வட்டப் பொறுப்பாளர் திரு. எழிலன் பேசும் போது கூறியதாவது;

உங்களையும் உங்கள் மக்களையும் பிரதேசத்தையும் பாதுகாப்போம் என்று உறுதி அளித்த இந்தியா அதைக் காற்றில் பறக்கவிட்டு ஸ்ரீலங்கா அரசுடன் இணைந்து சிங்களக் குடியேற்றங்களை நடத்தியதுடன் இராணுவ முகாம்களை விஸ்தரிக்கவும் உதவியது.

புலிகளை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கம் ஏற்கனவே இந்திய அரசுக்கு இருந்தமையினால்தான் இலங்கை அரச கேட்டவுடன் அது இங்கு வந்தது மட்டுமன்றி எமது மக்களுக்கு எதிராகவும் செயற்பட்டது. அதன் காரணமாகவே திலீபன் அஹிம்சைப் போராட்டத்தை ஆரம்பித்தான். (த-111)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 20 — 04 — 1926

இறைவனடி சேர்வு: 04 — 10 — 1987

### திருமதி தம்பிராசா அன்னமுத்து

திதி: 27 - 09 - 1993

ஆறாம் ஆண்டு சென்றதம்மா
ஆறவில்லை உங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்திக்காக
வயிரவரைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

கா. தம்பிராசா,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

## பருத்தித்துறைக் கடலில் பீரங்கித் தாக்குதல்

வல்வெட்டித்துறை, செப். 27

பருத்தித்துறை கடற் பிரதேசத்தில் நேற்று அதிகாலை 5 மணியளவில் ரோந்து வந்த படையினர் பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியை நோக்கி பீரங்கி தாக்குதல்களை நடத்தினர்.

ஆழ்கடலில் "பாஜ்"கள் நிறுத்தப்பட்டிருந்த பகுதியை நோக்கியும் பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. கரையோரப் பகுதிகளிலும் பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்தன.

எனினும் "பாஜ்"கள் எவையும் சேதமடையவில்லை. சிறிது நேரத்தில் கடற்படையினர் நடுக்கடலுக்குள் ஓடி மறைந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-155-109-15)


## தேவை

அச்சக வேலைக்கான Brass Rules, Lead Rules, Border Rules தேவை. நியாயமான விலைக்கு கொள்வனவு செய்யப்படும்.

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

- முகாமையாளர்
உதயன்


## தசாக கிரகயக்ஞ அழைப்பு

கடந்த 20-09-1993 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

பிரம்மஸ்ரீ

### ஏ. ப. சர்வேஸ்வரக்குருக்கள்

அவர்களின்

தசாகம், கிரகயக்ஞம் மற்றும் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| தசாகம் | 28-09-1993 | செவ்வாய்க்கிழமை பகல் 11மணிக்கு |
| மாசியம் | 29-09-1993 | புதன்கிழமை |
| சபிண்டீகரணம் | 30-09-1993 | வியாழக்கிழமை |
| கிரகயக்ஞம் (மதியபோசனம்) | 01-10-1993 | வெள்ளிக்கிழமை |

மேற்படி கிரியைகளில் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மாத்தனை,
கோக்குவில். (27486)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி நாகராசா இராசம்மா

(8 ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

மண்ணில் 18 — 06 — 1937

விண்ணில் 19 — 09 — 1991

திதி: 27 - 09 - 93

ஈராண்டுகள் ஓடி மறைந்தும்
எம் இதயத்தில் உங்கள் நினைவு
இன்றும் ஆறவில்லை - இன்னும்
கோடான கோடி ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவு
எம் மனதை விட்டகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

இல. 8, ஸ்ரேட்டன் றோட்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (27440)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4,500 பரல் மண்ணெண்ணெய் யாழ். அனுப்ப ஹமில்டன் இணக்கம்

## அரச அதிபருக்கு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். மாவட்டத்துக்கு மாதாந்தம் 4 ஆயிரத்து 500 பரல் மண்ணெண்ணெயை கப்பல் மூலம் அனுப்ப பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு இணக்கம் தெரிவித்துள்ளது. அது தொடர்பான எழுத்து மூலமான உறுதிமொழியை ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா யாழ். அரச அதிபரிடம் வழங்கியுள்ளார்.

இதன்படி இம்மாதம் முதல் (செப்டெம்பர்) மாதாந்தம் 4 ஆயிரத்து 500 பரல் மண்ணெண்ணெய் கப்பல் மூலம் எடுத்துவரப்படும்.

நேற்று முன்தினம் பருத்தித்துறையை வந்தடைந்த 'நிக்கிரி' கப்பலில் 2 ஆயிரத்து 235 பரல் மண்ணெண்ணெய் எடுத்துவரப்பட்டுள்ளது. இம்மாதத்துக்கான எஞ்சிய பரல் மண்ணெண்ணெயை அடுத்த தடவை இங்கு அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு யாழ். அரச அதிபர் புனர்வாழ்வு அமைச்சை கேட்டுள்ளார். (த-5)

## சுகாதார வாரம்

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுகாதார வாரமும் கொடி தினமும் இன்று திங்கள் முதல் அக்டோபர் 3ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் இவ்விழாவின் இறுதி நிகழ்ச்சிகளில் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் திரு. பி. இரத்தினசபாபதி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த-68)

# இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணப் பொதிகள்

## அ.சா. இணையம் வழங்கும்

யாழ்ப்பாணம், செப் 27

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கென 7 ஆயிரம் பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதிகள் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.


யுனிசெப் நிறுவனம் இதனை அன்பளிப்புச் செய்துள்ளது. ஒவ்வொரு பொதிக்குள்ளும் 50 ரூபா பெறுமதியான கொப்பிகள், பேனா, அடிமட்டம் என்பன அடங்கும்.

இந்த உபகரணங்கள் அடங்கிய பொதிகள் இடம்பெயர்ந்தோர் முகாம்களைப் பராமரிக்கும் அந்த அந்த அரசு சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக விரைவில் விநியோகிக்கப்படும்.

ஆண்டு 6 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கே இவ் உபகரணங்கள் வழங்கப்படும்.

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள சுமார் 9 ஆயிரம் பள்ளிச் சிறுவர்களுக்கு இவ் உபகரணங்களை விநியோகிப்பதற்காக தந்துதவுமாறு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யுனிசெப் ஸ்தாபனத்திடம் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தது. (த-162)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 15 | 21 |
| — | — |
| 03 | 09 |
| — | — |
| 1927 | 1991 |

அமரர்

**சினிவாசகம் முருகையா**

(ஓய்வுபெற்ற பிரதம இலிகிதர்-
அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பளை)

திதி: 27 - 09 1993

கண்ணின் இமைபோல,
மண்ணில் எமைக்காத்து வளர்த்த தந்தையே!
விண்ணில் சங்கமித்து ஈராண்டு சென்றிடினும்
எம்முள்ளம் மறக்குமோ அன்புத் தெய்வமே!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்,
நண்பர்கள்.

குமரகோட்டம்,
கொண்டாவில். (27419)

# இந்தியா மீது தமிழருக்கு இருந்த மயக்கத்தை போக்கியவன் திலீபன்

## உண்ணாவிரத நிகழ்வில் உரை

அச்சுவேலி, செப். 27

தியாகி திலீபனின் போராட்டம் இந்திய அரசின் மீது தமிழ் மக்களுக்கிருந்த மயக்கத்தைப் போக்கியதுடன், ஆயுதப் போராட்டத்தின் மீது நம்பிக்கை கொள்ளவும் வைத்தது.

இவ்வாறு கூறினார் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா.

அச்சுவேலி மகிழடி நரசிங்க வைரவர் கோயிலில் நடைபெற்ற தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரதத்தை முடித்து வைத்துப் பேசுகையிலேயே திரு. அரசண்ணா இவ்வாறு சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது;

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையும் தமிழர் தாயகக் கோட்பாடும் இந்திய மாநிலங்களைக் கூறு போட்டு விடும். இந்திய அரசின் பிராந்திய வல்லாதிக்கத்தை குறைத்து விடும் என்ற நம்பிக்கையில் இந்திய அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக பல நடவடிக்கைகளை எடுத்து வந்தது.

இலங்கையரசும், இந்திய அரசும் தத்தமது பாதுகாப்பை கருத்தில் கொண்டு தமிழ் மக்களின் அரசியல் உரிமையை மறந்து இலங்கை இந்திய ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. 40 வயதை உடைய ஒருவரும் 40 வருட அரசியல் அனுபவசாலியும் செய்து கொண்ட ஒப்பந்தம் தமிழீழ மக்களை அடிமைப்படுத்துவதற்கான பல அம்சங்களைக் கொண்டிருந்தது;

தியாகி திலீபனின் போராட்டம் இலங்கை - இந்திய அரசுகளின் கபடநாடகத்தையும் துரோகத் தனத்தையும் வெளிப்படுத்தியது. இந்திய அரசின் மீது தமிழ் மக்களுக்கிருந்த மயக்கத்தை போக்கியதுடன் ஆயுதப் போராட்டத்தின் மீதும் நம்பிக்கை கொள்ள வைத்தது.

தியாகி திலீபனின் எண்ணங்கள் இலட்சியங்கள் இன்று நிறைவேறி வருகின்றன தமிழினம் இழந்த பல நிர்வாக அமைப்புக்களை தனது பிரதேசத்தில் உருவாக்கிக் கொண்டு வருகின்றது என்றார்.

உண்ணாவிரதிகளுக்குக் குளிர்பானம் வழங்கி அரசண்ணா உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். (த-11)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 09 | 08 |
| — | — |
| 10 | 10 |
| — | — |
| 1906 | 1992 |

**அமரர் வை. தாமோதரம்பிள்ளை**

(இளைப்பாறிய கட்டட மேற்பார்வையாளர்)

திதி: 27 - 09 - 1993

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

(27480)


# பாரதி

சித்தன்கேணி

**A/L 93**

பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான

**துரித மீட்டலும் வினா - விடையும்**

புதிய பிரிவு

ஆரம்பம்:

**28-09-93**

செவ் காலை 8-30

பொருளியல்:
மகேந்திரன்
கணக்கியல்:
Sam
வர்த்தகம்:
பவின்
அளவையியல்:
சிவகுமார்!
தமிழ், இ. நாகலிங்கம்
பாலா
இந்துசமயம்:
N. ஸ்ரீதரன்

**A/L 94, 95**

புதிய பிரிவுகள் நடைபெறுகின்றன.

(6670)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 14 | 28 |
| — | — |
| 07 | 08 |
| — | — |
| 1932 | 1993 |

**அமரர் சிவலை சின்னத்துரை**

துர்க்காதேவி வாசலிலே தொண்டர்பணி தொடர்ந்து நின்றவேளை— சிங்கள இராணுவத்தின் விண் அதிரும் ஷெல் குண்டு உன் உடலை பொடியாக்கிச் சென்றதே! வெந்தவுடன் வெள்ளைப் பேழையிலே கண்டிட்டவேளை — மயங்கிவிட்டோம். உன் ஆத்மா சாந்தியாய் போய்ச் சேர தேவி பதம் போற்றுகிறோம்.

பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

ஐங்கரன் வீதி,
மானிப்பாய். (27417)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. உடன் சுத்தம் செய்து கொடுக்கப்படும். இல: 9, சந்தையா லேன், சூராவத்தை, சுன்னாகம்.
(6666)

சகல வசதிகளுமுடைய இரண்டரைப் பரப்பில் அமைந்த நவீன வீடு உரும்பராய் சந்திக்கு அண்மையில் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: இரத்தினராஜா (சந்திரோதய பாடசாலை முன் ஒழுங்கை), மானிப்பாய் வீதி, உரும்பராய் தெற்கு.
(27424)

புதிதாக தயாரிக்கப்பட்ட ரவர் வண்டில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வை. ஜெயமுருகன், இல. 48/1, நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (27434)

Pioneer ஸ்ரீறியோ அம்பிளியயர் SA 720, CS 307, 3 Way Box. வீடியோ ரையிற்றிக் மிக்சர் J. V. C. விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். இல. 12A, கந்தப்புராண வீதி, சுந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(27435)

## தேவை

யாழ். நகரில் பிரபல்யமான விருடியோவை நிர்வகிக்கக் கூடிய படத்துறையில் அனுபவமுடைய, ஆங்கில அறிவுடைய முகாமையாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும். இல. 917, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (இ-6128)

## புலமைப் பரிசில் பரீட்சை

1993இல் நடந்த பரீட்சை வினா விடையும் உள்ளடக்கிய கடந்தகால வினா-விடை வந்து விட்டது. உயர்கல்வி நிலைய சேவைகள் நிலைய வெளியீடு: விலை ரூபா 85/- குறைந்தளவு பிரதிகளே உண்டு. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி 6183)

## ஆண்டு 9 கணக்கியல்

கனிஷ்ட தொழில் நுட்பச் சான்றிதழ் பரீட்சைக்கான வணிகமும் கணக்கியலும் துரித மீட்டல் பயிற்சிகளும் விடைகளும் கடந்த கால வினா விடைகளும். ஆக்கியோன்: த. தர்மராஜன் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
(27428)

## நுளம்புத் தொல்லையா?

நமக்கில்லை, நுளம்புத் தொல்லை. நாம் இரவில் "நீம் தூபம்" புகைத்து நிம்மதியாகத் தூங்குகிறோம். பக்கற் ஒன்று ரூபா 3/- மட்டுமே. 25 பக்கற் கொண்ட அட்டை ரூபா 60/- அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது "மிக்வைற்" (இ-5968)

# கோவில்களுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து ஜனாதிபதியிடம் பிரஸ்தாபம்

யாழ்ப்பாணம், செப். 27 கடந்த மாதம் வலி. வடக்கு. மற்றும் வலி. மேற்குப் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது தாக்குதலுக்கு இலக்காகிச் சேதமடைந்த வழிபாட்டுத் தலங்களின் புகைப் படங்கள், மற்றும் தாக்குதலை கண்டிக்கும் மகஜர்கள் என்பவற்றை யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ஜனாதிபதி விஜேதுங்காவிடம் நேரில் கையளித்தார்.

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில், பறாளாய் முருகமூர்த்தி ஆலயம் உட்பட தாக்குதலுக்கு இலக்கான வழிபாட்டுத் தலங்களின் புகைப் படங்களையும்—

தாக்குதலை கண்டித்து சமய மற்றும் பொது அமைப்புக்களால் விடுக்கப்பட்ட கண்டன அறிக்கைகள் அடங்கிய மகஜர்களையுமே அரச அதிபர் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

கொழும்பில் ஜனாதிபதியை உத்தியோக பூர்வமாகச் சந்தித்த சமயம் அவர் இவற்றைக் கையளித்தார். (இ-5)


பாரதி
சித்தன்கேணி
A/L 94
பொருளியல்:
மகேந்திரன்
மீட்டல் வினா-விடை
ஆரம்பம்:
30 09 1993
வியாழன் 8மணி
(சி-6132)



A/L 94
DAY
CLASSES
ஆரம்பமாகிவிட்டன

பொருளியல் —
மகேந்திரன்
கணக்கியல் —
SAM
வர்த்தகம் —
பசில்
அளவையியல் —
சோதி
அரசியல் —
கியூபேக்
தமிழ் —
குழந்தை
இந்து சமயம்
இந்து நாகரிகம் } —
அருள் நம்பி
கிறிஸ்தவம் —
அருட்சகோதரர்
புவியியல் —
சண்

செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு வகுப்புக்கள் நடைபெறும்.

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(இ-6129)



வடபிராந்திய
யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்
அளிக்கும்
நிதியுதவி
கலை நிகழ்ச்சிகள்

இடம்: யாழ். இந்துக் கல்லூரி
காலம்: 16 — 10 — 1993
நேரம்: இரவு 6மணி

நிகழ்ச்சிகள்

1. பருத்திநகர் சாண்டோ எம். துரைரத்தினம் அவர்களினால் நடத்தப்படும் "வீரதீரச் செயல்கள்" முதல் முறையாக யாழ். நகரில் அரங்கேறவுள்ளன.
(அ) நெருப்பு புதைகுழியில் சில மணி நேரம் படுத்திருத்தல்
(ஆ) இரண்டு உழவு யந்திரத்தை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்
(இ) அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்
(ஈ) ஓடும் வாகனத்தை தொண்டையினால் இழுத்துப் பிடித்து நிறுத்துதல்
(உ) 35 கிலோ எடையுள்ள இரும்புக் குண்டினை 7 அடி உயரத்திலிருந்து வயிற்றில் ஏந்துதல்
(ஊ) பாரம் கொண்ட கல்லை மார்பில் மேல் வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்
(எ) இன்னும் பல வீரதீரச் செயல்கள்
2. திரு. மோகன் மாஸ்ரர் அவர்களினால் நடத்தப்படும் கராட்டி விளையாட்டுக்கள்.
3. கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் பட்டிமன்றம்.
4. கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் நாடகம்.
— வ. யா. ஆ. ம. வ சங்கம்.
(சி-6138)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி
சுமித்திரா (கௌரி) செல்வராசா

அகால மரணம்: 28 — 08 — 1993 சனிக்கிழமை
நடைபெற்ற இடம்: துர்க்காபுரம் மகளிர் இல்ல முன்றிலில்
வளர்ந்த இடம்: துர்க்காபுரம் மகளிர் இல்லம்
பிறந்த இடம்: மணியந்தோட்டம், யாழ்ப்பாணம்
வயது: 13
திதி: ஆவணி பூர்வபக்க துவாதசி
நினைவுப் பிரார்த்தனை: 27 — 09 — 1993 திங்கட்கிழமை
நிகழ்த்துபவர்: தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம்

எங்கள் சுமித்திரா! இனிய குழந்தாய்!
எங்கள் இல்லத்தின்
எழில் மிகு சுடரே!

அறுபது சுடரில் ஒரு சுடர் அணைந்தது
என்ன விதியோ
யார் கண்பட்டதோ!

எல்லாம் வல்ல இறைவியே அறிவாள்
தேருக் கென்று புத்தாடை வாங்கியும்
பொன்னுடல் தனக்கே போர்த்தி அனுப்பினோம்

எறிகணை வீச்சில் திடுமெனச் சாய்ந்தாய்
நெற்றியில் இட்ட நீறும் பொட்டும்
அன்னை துர்க்கையின் அழியாச் சின்னம்

நின்னுடை ஆத்மா சாந்தி யடையும்
என்பதில் என்ன சந்தேக முண்டோ!
பெரியம்மாவும் அக்காமாரும் தங்கைகள் உட்பட
அறுபது பேரும் உன் புகழ் பாடி
அஞ்சலி செய்வோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இங்ஙனம்,
தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
தெல்லிப்பழை துர்க்காதேவி - பெண்கள் தொண்டர் சபை,
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.
(27421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மக்கள் பணி தொடரும்

இன்று 1993 செப்டெம்பர் மாதம் 27ஆம் நாள்.

சரியாக மூன்று வருடங்களுக்கு முன்னர் இதே திகதியில்— நாளில்— தன் மீது தொடுக்கப்பட்ட பயங்கரமான தாக்குதலை உதயன் இலகுவில் மறந்துவிட இயலாது.

ஆம். அரச பயங்கரவாதம் நேரடியாகவே தன் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட செப் 27 என்றுமே உதயனுக்கு நினைவில் வரும். தமிழ் மக்களின் கருத்துக் காவலனாக அன்றும், இன்றும் விளங்கும் உதயனை குண்டுவீச்சு நடத்தித் தண்டித்து அவனது குரலை அடக்கிவிடலாம் என்று நினைத்த அரசும் அரச படைகளும் தோல்வியே கண்டன.

விமானப்படை கண்மூடித்தனமாக, மிலேச்சத்தனமாக நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலினால் பணிமனையில் உண்டான உயிர், உடைமைச் சேதங்களின் மத்தியிலும், மூன்றாம் நாளே உதயன் உத்வேகத்துடனும் வீறுடனும் உதித்தான்.

உதயன் தனது பிறப்பு முதலே தமிழர்களின் விடுதலைக்காக உழைக்கும் உரிமைக் குரலாகவே பணி புரிந்து வருகிறான். அதற்காகவே அரசாங்கம் அவனைத் தண்டிக்க முற்பட்டது. ஆனால் உதயன் துவண்டுவிடவில்லை. தமிழர்களின் அரசியல், பொருளாதார, விடுதலைக்காகவும் சமூக நீதிக்காகவும், கலை கலாசார விழிப்புணர்வுக்காகவும்— மொத்தத்தில் தமிழ் மக்களின் நலனுக்கும் மேம்பாட்டுக்குமான— அவனது பணி இன்று வரை மேன்மேலும் கூர்மை அடைந்து வருகிறது.

தமிழ் மக்களே உதயனின் நாயகர்கள். அவர்களின் நலமும், தாயகத்தின் வளமும் அவனின் இலட்சிய இலக்குகள். அதனால் அவனது அடக்கமான, துணிச்சலான தர்மப்பணி அந்த இலக்குகளை நோக்கித் தொடரும். குண்டடிபட்ட பின்னரும் இன்று வரை அந்தப் பணி தொடர்ந்து கொண்டிருக்கிறது. தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை அப்பெரும்பணி ஓயாது; ஒழியாது.

விடுதலை நாடிய விழிப்புணர்வை மக்களுக்கு ஊட்டுவதை உதயன் தனது கடமையாகக் கருதுகின்றான். தனக்குள்ள பொறுப்பாக உணர்கின்றான். அதன் வழி அவனது விழிகள் கூர்மையாக நோக்குவதை, ஆழ அகலமாக ஆராய்ந்து மக்கள் கருத்தை உருவாக்குவதை ஸ்ரீலங்கா அரசு தடுத்துவிட முடியாது.

1990 ஜூன் மாதம் யுத்தம் தொடங்கியதும் அரசு தமிழ்ப் பகுதிகளில், முதலில், மறைமுகமாகப் பத்திரிகைகளைத் தடைசெய்ய முயன்றது. பின்னர் உத்தியோகபூர்வமாகத் தடுத்தது. அதனால் நாளிதழ் அச்சிடுவதற்கான சாதனங்கள், மூலப்பொருள்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கிடைப்பினும் உதயன் தனது மக்கள் பணியைத் தொடர்கின்றான்.

பல இன்னல்கள், இடையூறுகள், கிடைக்காமைகளின் மத்தியிலும் உதயன் இடைவிடாது உழைக்கும் உணர்வை இழக்கவில்லை. தமிழ் மக்களின் நாடியைச் சரியாகப் பிடித்தும், பொறுப்புணர்ந்தும், நியாயம் பிறழாமலும், நியமம் தவறாமலும் நிதானம் இழக்காமலும் அவனது எழுத்துப் பணி — மக்கள் பணி—தொடர்கிறது; மக்கள் நாளிதழாகவே மிளிர்கிறது.

ஈழத் தமிழர்களின் சுதந்திரத்தை முன்னிறுத்திய முன்னோக்கும், வழிநடத்தலும் உதயனின் பண்புகள். தமிழ் மக்களும் அவர்கள் நலனும், மேம்பாடும் அவனது அடித்தளங்கள். அரசின் எத்தரு பயமுறுத்தலின் மத்தியிலும் உதயனின் உத்தமப் பணி— தர்மப்பணி— தொடரும். அதற்கு மக்கள் ஆதரவு உண்டு என்ற அசையா நம்பிக்கை அவனுக்கு உண்டு. தெய்வீகத் துணை என்றும் மேலே பக்க பலமாக நிற்பதால்...

## ஆலயங்களில்

கோண்டாவில் அருள் மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் கோயில் வருடாந்த பூங்காவன உற்சவம் இன்று திங்கள் 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

o o o

கடையிற் சுவாமிகளின் 102 ஆவது குருபூசையும், அன்னதானமும் நாளை காலை 10 மணிக்கு கடையிற் சுவாமிகள் சமாதி கோவிலயத்தில் நடைபெறும்.

## நாளை

யாழ். பிரதான வீதி, திருமறைக்கலாமன்றக் கேட்போர் கூடத்தில் நாளை செவ்வாய் மாலை 5 மணிக்கு பண்பாட்டுக் கருத்தரங்கு ஒன்று நடைபெறும்.

"இலக்கியம் காட்டும் பண்பு" என்னும் தலைப்பில் திரு. கா. [illegible] உரையாற்றுவார்.

## சுகாதாரம்பற்றிய கலந்துரையாடல்

நல்லூர் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதி சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய் முற்பகல் 10 மணிக்கு நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொதுஜன நூலகக் கட்டட மேல் மாடியில் நடைபெறும்.

நல்லூர் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தேநீர் சாலைகள், உணவு விடுதிகள், பாண் பேக்கரிகள் போன்றவற்றின் சுகாதார செயற்பாடுகள் குறித்தும் அங்கு கலந்துரையாடப்பட இருப்பதாக பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. ஆ. மகாலிங்கம் அறிவித்துள்ளார். (இ-5)

## இசை ஆராதனை

ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் மிருதிகா பிருந்தாவனத்தில் நடைபெறவுள்ள மாதாந்த இசை ஆராதனைத் தொடரின் முதலாவது நிகழ்ச்சி இன்று திங்கட்கிழமை நடைபெற உள்ளது.

நல்லூர், கோவில் வீதியில் உள்ள மிருதிகாவில் இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த இசை ஆராதனையை இசைக்கலைமணி சுவாமித்தகி செல்வி கலகாம்பிகை பத்மநாதன் நிகழ்த்தவுள்ளார்.

இராகம், தாளம், பல்லவி இழையோடும் முறையில் இந்த இசை ஆராதனை அமையும் என்று அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (வ)

## வல்லிபுர ஆழ்வார் தீர்த்தோற்சவம்

துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலின் கடல் தீர்த்த உற்சவம் இம்முறை ஆலயத்தின் வடக்கு வீதியில் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்படுகின்றது.

கடலுக்குச் சென்று தீர்த்தமாட ஸ்ரீலங்கா அரசு அனுமதி மறுத்திருப்பதைத் தொடர்ந்தே இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-109)

# ஆங்கில ஆசிரியர் பதவி பயிற்சி நெறி இங்கே!

தராதரப்பத்திரமற்ற ஆங்கில உதவி ஆசிரியர்களாக நியமனம் பெற தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்குரிய சேவை முன் பயிற்சி நெறி யாழ்ப்பாணத்திலேயே நடத்தப்படவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறிக்காக வவுனியாவுக்கும், பொலனறுவைக்கும் அழைக்கப்பட்ட ஆசிரியர்கள் அங்கு செல்லத் தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் திரு. கா.மாணிக்கவாசகர் கொழும்பில் தேசிய கல்வி நிறுவன அதிகாரியைச் சந்தித்து மேற்படி பயிற்சி நெறியை யாழ்ப்பாணத்தில் நடத்த ஒழுங்கு செய்துள்ளார் என்றும்—

பயிற்சி நெறி தொடர்பான சகல அறிவுறுத்தல்களுடன் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் திரு. எஸ். தெய்வதவபாலன் கொழும்பில் இருந்து இங்கு வந்து பயிற்சி நெறியை நடத்த ஏற்பாடு செய்வார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-ஓ 5)

# வாந்திபேதி நோயாளிகள் 18 பேர் நேற்றும் அனுமதி

யாழ்.குடா நாட்டில் பரவி வரும் வாந்திபேதி (கொலரா) நோயினால் பாதிக்கப்பட்ட மேலும் 18 பேர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கைதடி, நாவாந்துறை, யாழ்.கொட்டடி, குருநகர்மற்றும் பண்டத்தரிப்புப் பகுதிகளைச் சேர்ந்தோரே நேற்று யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (உ-15)

# சிகிச்சைக்குத் தேவையான மருந்துகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், செப். 27

தற்போது குடாநாட்டில் தீவிரமாகப் பரவிவரும் கொலரா நோயைக் கட்டுப்படுத்துவதற்காக யாழ். ஆஸ்பத்திரியில் இருந்து அவசரமாகக் கோரப்பட்ட மருந்து வகைகள் நேற்று குமண கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு தரைவழியாக அனுப்பி வைக்கப்பட்ட இம் மருந்துகள், திருகோணமலையில் இருந்து நோயாளிகளை ஏற்றி வந்த குமண கப்பல் மூலம் நேற்று பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்டன.

நேற்றே அவை அனைத்தும் குமணவில் இருந்து இறக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டன.

பெருந்தொகையான 'டெட்ராஸைக்கிளின்' குளிசைகள் மற்றும் 'சேலைன்' போத்தல்களே நேற்று எடுத்து வரப்பட்டன. (உ-15)

# எழுதுநர் தர பதவிகள் வெட்டுப்புள்ளிகள் வந்தன!

யாழ்ப்பாணம், செப். 27

எழுதுநர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்கும் ஆட்களைச் சேர்ப்பதற்காக கடந்த ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் நியமனங்களைப் பெறத் தகுதியுடையவர்களைத் தெரிவு செய்வதற்கான வெட்டுப் புள்ளி பட்டியல் ஒன்றை யாழ். அரச அதிபர் இங்கு எடுத்து வந்துள்ளார்.

மாவட்ட அடிப்படையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என மூன்று பிரிவுகளின் அடிப்படையில் இவ்வெட்டுப் புள்ளி தயாரிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் எழுதுநர் தர பரீட்சையில் 135 புள்ளிகளும் அதற்கு மேல் பெற்றவர்களும், தட்டெழுத்தாளர் தர பரீட்சையில் 90 புள்ளிகளும் அதற்கு மேல் பெற்றவர்களும் நியமனம் பெறத் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி புள்ளிகளைப் பெற்ற— தகுதியுடையவர்களுக்கான — நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்யுமாறு யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி புள்ளிகளைப் பெற்ற அனைவருக்கும் அவர்களுக்குரிய நியமனங்கள் வழங்கப்படும் என அரச அதிபர் தெரிவித்தார்.

தற்போதைய வெட்டுப் புள்ளி அடிப்படையில் தகுதி பெறுபவர்களுக்குத் தொடர்ந்து நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## பாடசாலைகளில்

தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வித்தியாலய கலையரங்கில் அதிபர் செ. யோகச்சந்திரன் தலைமையில் நடைபெறும். (த-155)

o o o

தென்புலோலி குருக்கட்டு பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை திரு. இரா. [illegible] தலைமையில் நடைபெறும். (த-178)

## இன்று

ஆவரங்கால் நாடகமன்றத்தின் இரண்டாவது ஆண்டு விழா இன்று திங்கட்கிழமை மேஜர் அப்பையா கலையரங்கில் நடைபெறும். விழாவில் யாழ். மாவட்ட கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. எஸ். கணபதிப்பிள்ளை பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (த-11)

## ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் செப்டம்பர் மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த "குமண" கப்பலில் எடுத்து வரப்பட்டன.

நேற்று கப்பலில் இருந்து இறக்கப்பட்டு பருத்தித்துறையில் வைக்கப்பட்டிருந்த வவுச்சர்கள் இன்று யாழ். செயலகத்துக்கு எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

**நீரிருந்தால் ஏர்பிடிப்பார் ஏர்பிடித்தால் நெல் கிடைக்கும்**

## கொடி வாரம்

யாழ்ப்பாணம், செப். 27

சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர் கடந்த 25 ஆம் திகதி முதல் எதிர்வரும் 2ஆம் திகதி வரையான காலத்தில் —கொடி வாரத்தை நடத்துகின்றனர். (ஒ)

## அதிபர்கள் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், செப். 27

வெண்கட்டிக்கும் கரும்பலகை மைக்கும் விண்ணப்பித்த பாடசாலை அதிபர்கள், அவற்றை இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை யாழ். இந்து கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிபர்கள் பணத்தையோ அல்லது பாடசாலைக் காசோலையையோ வழங்கி மேற்படி பொருள்களை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டது. (ஓ)

## 'குமண' வந்து திரும்பியது

யாழ்ப்பாணம், செப். 27

கொழும்பில் சிகிச்சை பெற்று திரும்பிய 95 நோயாளரை திருகோணமலையில் இருந்து ஏற்றி வந்த குமண கப்பல், யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பில் சிகிச்சை பெறச் செல்லும் 101 நோயாளரை ஏற்றிக்கொண்டு மீண்டும் நேற்று மாலை திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

இக் கப்பலில் யாழ். ஆஸ்பத்திரி பணிப்பாளர் டாக்டர் செல்வி சுவகரத்தினம் தலைமையில் மூவர் கொண்ட யாழ். ஆஸ்பத்திரி பிரதிநிதிகள் குழு ஒன்று கொழும்புக்கு புறப்பட்டது. (உ-15-173-109)

## கொலரா தடுப்பு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். இந்துக் கல்லூரி லியோ கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ள வாந்திபேதி (கொலரா) நோய்த் தடுப்பு தொடர்பான கருத்தரங்கு, இன்று காலை 8 மணிக்கு விராவலி வீதியில் உள்ள பட்டப் படிப்புகள் கல்லூரியில் இயங்கும் வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலையிலும் —இன்று முற்பகல் 11.30 மணிக்கு நியூ மாஸ்ரர் கல்வி நிலையத்தில் இயங்கும் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

யாழ். பிராந்திய சுகாதார வைத்தியப் பணிமனையின் அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்காக இந்தக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ஒ-5)

## தென்னிலங்கை பத்திரிகையாளர் குழு வருகிறது

யாழ்ப்பாணம், செப். 27

'லங்காதீப' உட்பட தென்னிலங்கை பத்திரிகை நிறுவனங்களைச் சேர்ந்த பத்திரிகையாளர் குழு ஒன்று இந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய உள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி 'நரோமா' கப்பல் மூலம் அவர்கள் காங்கேசன்துறைக்கு வந்து அங்கிருந்து பருத்தித்துறைக்கு வர ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்:
03 — 12 — 1969
மறைவு:
08 — 10 — 1992
திதி:
27 — 09 — 1993

## அமரர் பத்மநாதன் பத்மராஜன்
(கண்ணன்)
(நியூ சாரதா ரேட் சென்ரர் — கொழும்பு)

அன்பு மகனே! ஆசை அண்ணாவே!
எங்கே சென்றீர்கள் — நீங்கள்
கண்ணன் என்றோம்! அண்ணா என்றோம்!
இனி யாரைக் கூப்பிடுவோம்.

என்றும் உங்கள் நினைவுமாறாத!
தாய், தந்தை, சகோதரர்கள்,
அக்கா, அத்தான், மருமகன்,
நியூ சாரதா ரேட் சென்ரர் குடும்பத்தினர்.

687/28 A, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம். (27441)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுந்தரம் பொன்னம்மா

குமார கோவில் வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்சமயம் நோர்வேயில் வசித்தவருமாகிய சுந்தரம் பொன்னம்மா நோர்வேயில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா சுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், நேசம்மா (மலேசியா), பூதப்பிள்ளை (கட்டுறவு இலாகா யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற மின் பொறியியலாளர் பரமேஸ்வரன், தனேஸ்வரி, புவனேஸ்வரி, சிவனேசன் (நோர்வே), இராசேஸ்வரன் (கனடா), யோகேஸ்வரி (நோர்வே), யோகநாதன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற மின் பொறியியலாளர் இராமலிங்கம் (மலேசியா), சாரதாதேவி, புவனராணி, கணேசன், வரதராஜன், சிவயோகி (நோர்வே), மாலா (கனடா), யோகேஸ்வரன் (நோர்வே) விமலதேவி (நோர்வே) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற குருநாதபிள்ளை மற்றும் சேதுப்பிள்ளை, செல்லராசா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நோர்வேயில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சுந்தரம் பூதப்பிள்ளை
(மகன்)

''ஞானவாசா''
7 ஆம் கட்டைவழி,
சண்டிலிப்பாய். (27438)

## மகாதேவன் சோமசுந்தரம்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்— ஏற்றுமதி, இறக்குமதி திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், கிலோன் பிறிண்டேர்ஸ் லிமிட்டெட்.)

நல்லூரைச் சேர்ந்த மகாதேவன் சோமசுந்தரம் 24-09-93 இல் கொழும்பில் காலமானார்.

இவர் விஜயாம்பாவின் அன்புக் கணவரும், இரவீந்திரன் (கனடா), விஜித்தா ஆகியோரின் அருமைத் தந்தையும், ஜெயகலா (கனடா), பாலசுப்பிரமணியம் தவபாலன் (சட்டத்தரணி, சட்ட விரிவுரையாளர் — யாழ். தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், ச. விஜயரட்ணத்தின் மைத்துனரும், சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களான ரஜீவ், கான்டீபன் மற்றும் சாயிசஞ்சீவ் (யாழ். இந்து. ஆரம்ப பாடசாலை), தவலஷ்மி ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26 ஆம் திகதி) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாலசுப்பிரமணியம் தவபாலன்.
(மருமகன்)

இல. 82/5, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். (சி/5970)

# செம்மலையில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், செப். 27

மணலாறு, செம்மலை கடற்கரையோரப் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 10.40 மணியளவில் இரு புக்காரா விமானங்கள் தாக்குதல் நடத்தின.

அப்பகுதியில் இரு விமானங்களும் மாறி மாறி குண்டு வீச்சு மற்றும் றொக்கட் தாக்குதலை நடத்தின. சேத விபரம் குறித்து தெரியவரவில்லை. (ஓ)

## பாதுகாப்பு ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்பகுதி இருளில் மூழ்கியிருந்தது.

காயமடைந்த கந்தையா சுப்பிரமணியம் (63 வயது) அவரது மருமகள் பாக்கியராசா தங்காதேவி (29 வயது) ஆகிய இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

மண்டைதீவுப் பகுதியில் இருந்து ஏவப்பட்ட ஷெல்லே இப் பகுதியில் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-15)

## மக்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று திலீபன் விரும்பினான்.

இனாவிக் கடலை அரசு தடைப் பிரதேசமாக்கியிட்டது. கடற்தடைச் சட்டம் மூலம் வடக்குக் கடற்பிராந்தியத்தில் மீன்பிடித் தொழிலைத் தடை செய்திருக்கிறது. எனினும் மக்கள் புரட்சி செய்து தடைகளை துணிச்சலுடன் மீறி இனாவிக் கடலில் பயணம் செய்கிறார்கள். மீனவர்கள் கடலில் தொழில் புரிகிறார்கள். இந்தப் புரட்சிகள் மக்கள் தங்களை அறியாமலே செய்பவை. இந்தப் புரட்சி முழுமை அடைய வேண்டும்.

### அழிக்கத்திட்டம்

எதிரி பல தடவைகள் எம்மை எதிர்த்துப் போராடி பல தோல்விகளையே பெற்றுள்ளான். அதனால் அவனுக்குப் பல இழப்புகள் ஏற்பட்டன. இராணுவ நடவடிக்கைகளின் பின்னடைவு, மனச்சோர்வு, நம்பிக்கையீனம் ஆகிய தாக்கங்களால் எம்மை எந்த வழியிலேனும் அழித்துவிடவேண்டும் எனத் திட்டமிட்டுள்ளான். அதற்கான நீண்ட காலப் போர் திட்டத்தை வகுத்து கடந்த இரண்டு வருடங்களாகச் செயற்படுத்தி வருகின்றான்.

### மயக்கும் முயற்சிகள்

தனது திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு எதிரி தமிழர்களை மயக்க வைக்க முயல்கிறான். அதற்காகச் சமாதானப் பேச்சு, இடைக்கால நிர்வாகம், பூநகரி பாதை திறப்பு போன்ற பல யுத்திகளைக் கையாண்டு வருகிறான். எனவே மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கான வேலைத் திட்டங்களை எமது தலைமை வகுத்துள்ளது. அவற்றைக் கருவாகக் கொண்டு, மக்கள் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும்.

அரசின் மாயைக்குள் சிக்கிக் கொள்ளாது எதிரியை எதிர்த்துப் போராடி தாயகத்தைக் காக்க வேண்டும். தளர்ச்சி, மனக்குழப்பம், பின்னடைவு எதற்குமே இனி இடமில்லை. — என்று தெரிவித்தார்.

தமிழீழ மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ஜயா, பேராசிரியர் அ. சண்முகதாஸ், இந்து குருமார் சங்கச் செயலாளர் பிரம்மஸ்ரீ குமாரராஜக் குருக்கள், தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகத் தலைவர் வண. பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் ஆகியோரும் உரையாற்றினர். (அ-15-111)

# பெரும் மக்கள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் பரவலாக உண்ணாவிரத நிகழ்வுகள், நினைவு தினக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள், சிரமதான வைபவங்கள் என்பன மக்களால் நடத்தப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று கோட்ட ரீதியாக நினைவு நிகழ்வுகள் மிகப் பெரிய அளவில் நடைபெற்றன.

### நல்லூரில்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் உள்ள உண்ணாவிரத மண்டபத்தில் நேற்று நடைபெற்ற உண்ணாவிரதத்தில், அரச தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள், பாடசாலைகள் தனியார் கல்வி நிலையங்களைச் சேர்ந்த மாணவர்கள், கூட்டுறவுத் துறையினர், பொதுப்பணி நிறுவனங்களைச் சேர்ந்த மக்கள், சன சமூக நிலையப் பிரதிநிதிகள் என்று ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

உண்ணாவிரதம் காலை 7.35 மணிக்கு ஆரம்பமாகியது திலக அரசியல் பொறுப்பாளர் செம்மணன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

காலை தொடக்கம் மாலை 5.30 மணி வரை பல பகுதிகளில் இருந்தும் பறவைக் காவடிகள், ஆட்டக் காவடிகள், ஊர்திகள் நல்லூருக்கு வந்து கொண்டிருந்தன. அவற்றுடன் பெரும் எண்ணிக்கையான மக்களும் அணி அணியாக வந்து சேர்ந்தனர்.

உண்ணாவிரதம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இசை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

திலீபனின் உயிர் பிரிந்த நேரமான முற்பகல் 10 48 மணிக்கு அனைத்து மக்களும் எழுந்து நின்று இரண்டு நிமிட நேர மௌனாஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து பாண்ட் வாத்திய இசை முழங்கியது. பின்பு மக்கள் அமர்ந்திருந்து தமது உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தனர்.

பிற்பகலில் ''திலீபன் தன் தியாக மரணத்தின் மூலம் நாட்டு மக்களுக்கு விட்டுச் சென்ற செய்தி என்ன?'' என்ற தலைப்பில் பட்டி மன்றம் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது.

தீவகக் கோட்ட மக்களும், சண்டிலிப்பாய் கல்வலை சலவைஞர்களும், பொதுமக்களும், மாதகல் தனியார் போக்குவரத்து சங்கமும், சிற்றூர்திச் சங்கமும் மற்றும் இடம்பெயர்ந்த புத்தூர்வாழ் வயாவிளான் மக்களும் பறவைக் காவடிகளையும், பால் காவடிகளையும் ஊர்திகளையும் எடுத்து வந்தனர்.

உண்ணாவிரத இறுதியில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் மாலை 4.30 மணிக்கு நிறைவுரையை நிகழ்த்தி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

மாலை 5.10 மணிக்கு நல்லூர் வட்டப் பொறுப்பாளர் திரு. எழிலனின் தலைமையில் நினைவுக் கூட்டம் ஆரம்பமானது.

தீவகக் கோட்ட மக்களின் ஊர்தி ஊர்வலமும், பறவைக் காவடியும் கோவில் வீதியால் வந்து கொண்டிருந்த வேளை—

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்தை வந்தடைந்த போது, தியாகி திலீபன் உயிர் நீத்த நேரமான —10-48 மணியாகியது.

அந்த இடத்தில் எல்லாம் நிறுத்தப்பட்டு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது.

### வடமராட்சியில்

வடமராட்சி கோட்டப் பிரிவில் அல்வாய் மாலிசந்திப் பிள்ளையார் கோவில் முன்றிலில் திலீபனின் நினைவுநாள் நிகழ்வுகள் இடம்பெற்றன.

உண்ணாவிரத ஆரம்பத்தின் போது பாண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டது தொடர்ந்து பஜனை, காவடி, கும்மி, பட்டிமன்றம், கவியரங்கம், வில்லிசை என்பன இடம் பெற்றன.

இந்த நிகழ்வுக்கு மத்தியில் திலீபனின் உயிர்பிரிந்த நேரமான 10.48 மணியளவில் விசேட பந்தலில் அமைக்கப்பட்ட திலீபனின் உருவப் படத்துக்கு வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து பொது மக்களும் மலரஞ்சலி செலுத்தினர்.

உண்ணாவிரத நிறைவுரையை திரு. தேவர் அண்ணா நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து உடுப்பிட்டி வட்டத்தில் தொடர்ந்து 4 நாட்கள் உண்ணா நோன்பிருந்த நால்வருக்கு மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் நீராகாரம் வழங்கியதைத் தொடர்ந்து அடையாள உண்ணாவிரதம் முடிவுற்றது.

உண்ணாவிரத நிகழ்வினைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன் தலைமையில் நினைவுப் பொதுக்கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

### தென்மராட்சியில்

தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு இறுதி நாள் உண்ணாவிரதமும் அஞ்சலிக் கூட்டமும் நேற்று தென்மராட்சி கோட்டத்தில் நுணாவில் மேற்கு மணற்குணாய் பிள்ளையார் கோவில் உண்ணாவிரத பந்தலில் நடைபெற்றது. நான்கு வட்டப் பிரிவுகளிலும் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் உண்ணாவிரதத்தில் பங்குபற்றினர்.

மாலையில் உண்ணாவிரதம் முடிவுற்றதும் நினைவுக் கூட்டம் நடைபெற்றது தென்மராட்சி தளபதி திரு. பரணி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்,

நீதித்துறைப் பொறுப்பாளர் பரா, மூத்த உறுப்பினர் தேவர் அண்ணா, வி. பாலகுமாரன் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

(அ-15-162-178-109-155-117)

## விமானப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதாவது:-

''தரைப்படையிலும், கடற்படையிலும் நிறைவு கண்டநாம், பல சாதனைகளையும், வெற்றிகளையும் சூட்டிவருகிறோம்.

''இனிநாம் விமானப்படை அமைத்து அதில் நிறைவுகாண வேண்டியிருக்கிறது. — இன்று இங்கு இயந்திரத் துப்பாக்கிகள் மூலம் விமானத்தை தாக்கும் நாம் விரைவில் பாரிய ஆயுதங்கள் கொண்டு விமானங்களைத் தாக்கும் அளவுக்கு முன்னேறுவோம்.

''மண்டிமலை முகாமை அரைமணி நேரத்தில் தகர்த்த எங்களால் ஏன் பலாலியை அழிக்க முடியாது? மக்கள் ஆதரவுடன் நாம் எமது போராட்டத்தில் வெற்றி கண்டு, எமது இலக்கான தமிழீழத்தை விரைவில் அமைப்போம்.''— என்றார். (உ-8-5)

# ''கோமாரி'' இன்று வரும்

யாழ்ப்பாணம், செப். 27

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு ''கோமாரி'' கப்பல் இன்று பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-8)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறை வேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27-09-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org